J. R. T. S.] No. 51 10

# நற்கொடை.

## தேவ வாக்கு மனுஷனுடைய சீரை வெளிப்படுத்துகின்றது.

நாம் தேவனுடைய வாக்கை வாசித்துப் பார்த்தால் அதிலே பொருள்களெல்லாம் ஆரம்பமான விபரமும் எல்லாவற்றுக்கும் மேலாக மனுஷனுடைய ஆதி நிலைமை என்னவென்றும் காண்போம். தேவன் தமது சாயலின்படி மனுஷனைச் சிருஷ்டித்தாரென்று அதிற் சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது, பரிசுத்தம், அன்பு, நீதி, உண்மை, சமாதானம் முதலிய குணங்களையுடைய ஆவியை உள்ளவனாய் உண்டாக்கப்பட்டானென்பதே கருத்து. அவன் தேவனுக்குப் பிரியமான காரியங்களையே தெரிந்துகொண்டு அவர் சித்தத்தின்படி செய்வதிலேயே சந்தோஷமடைந்தான். அவனில் தற்சிநேகம், பெருமை, வீம்பு முதலிய குணங்களிருந்ததில்லை, அவன் பரிசுத்தனும், பாவமில்லாதவனுமாயிருந்தான். மனம் வாக்குச் செய்கைகளெல்லாவற்றிலும் பரிசுத்தனாயிருந்தான். அதினால் பூரண பாக்கியவானாயிருந்தான். துன்பத்தை அறியவில்லை. துக்கம் வருத்தம் அவனுக்கு அன்னியமாயிருந்தன. சென்ற காலத்தைப் பற்றிய பயமாவது, வருங் காலத்தைப் பற்றிய அங்கலாய்ப்பாவது இருந்ததில்லை; தனது பரம பிதாவாகிய தேவனது அன்பிலும் அவர் பராமரிப்பிலும் பூரண நம்பிக்கையுள்ளவனாயிருந்தான். ஆதியிலே மனுஷனுடைய நிலைமை இப்படியேயிருந்தது. அவனுக்கு வேண்டிய யாவும் தேவனால் கொடுக்கப்பட்டது. அவன் களைப்பில்லாமல் வேலைசெய்து இரவிலே தேவனுடைய சிறகுகளின் கீழ் ஒதுங்கிப் படுத்திருந்து சந்தோஷத்தை அனுபவித்தான். இதுவே தேவநூலிலே சொல்லப்பட்டிருக்கிற விபரம். இது சருவ வல்லமையுள்ள தேவனும் நித்திய பிதாவுமாகிய சிருட்டிகர் நியமித்ததென்று காண்கிறோம். மேலும் இந்த நிலைபரமானது உத்தமமான எந்த மனுஷனும் வாஞ்சிக்கத்தக்கது.

2. மனுஷனுடைய தற்கால நிலைபரமென்னவென்று தேவவாக்கிலே ஆராய்வோமாக. பரிசுத்தநிலைமை கெ

நிக நிற்கவில்லை. தேவ சத்துருவாகிய பசாசு இந்தப்
பாக்கிய கிரியையும் நிலைமையையும் அழிப்பதற்குச் சம
யம் பார்த்திருந்தான். மனுஷன் கீழ்ப்படிந்து நிற்பா
னோ அல்லவோவென்று சோதித்தறிவதற்குப் பசாசுக்
குத் தேவன் இடங்கொடுத்தார். அப்படியே சோதிக்க
ப்பட்டபோது மனுஷன் விழுந்தான். மனுஷன் தேவ
கட்டளையை மீறினன். மீறினதினால் பாவமும் பாவத்
தினால் மரணமும் உலகத்தில் பிரவேசித்தன. 1854 ம்
ஆண்டு பங்குனி மாதம் 12 ந் திகதி இரவு அத்தசாமத்தி
லே இங்கிலந்திலே ஒரு பெரிய பிரளயமுண்டாகி அதி
னாலே ஆபத்து வந்தது. அந்தப் பிரளயத்தால் வீடுகள்
பட்டினங்கள் அதனங்கள் அழிக்கப்பட்டதல்லாமல் 250
ஆத்துமாக்கள் நித்தியத்துக்கு அள்ளப்பட்டார்கள். பிர
ளயமுண்டான விதமென்ன? ஒரு பெரிய தண்ணீர்த்த
டாகத்தின் அணையானது வெடிப்புக்கொண்டது. அதை
அந்த வெள்ளிக்கிழமை இரவு இஞ்சினீர் போய்ப் பார்த்
தபொழுது ஒரு விரலளவு பருமையான அந்த வெடிப்
பொன்றால் தண்ணீர் பொசிவதைக் கண்டு அச்சமடைந்
து உடனே குதிரைமேல் ஏறிப் பாய்ந்து சனங்களை ஓடி
த்தப்பிக்கொள்ளும்படி சொல்ல விரைந்தார். ஆயினும்
பிந்திப்போயிற்று. வெடிப்பு வர வரப் பெரிதானதால்
வெள்ளம் இடி முழக்கம்போலப் பெரும் இரைச்சலுட
னபெருகி எல்லாவற்றையும்அள்ளிக்கொண்டுபோயிற்று.
முதலில் அவ்வளவு சிறிதாயிருந்த வெடிப்பினால் பிறகு
இவ்வளவு மோசம் நேரிட்டது, முதல் மனுஷனுடைய
மீறுதலும் இப்படியேயிருந்தது. ஒரேயொரு செய்கை
யால் அழிவின் வெள்ளம் உட்பிரவேசித்தது. மீறுதல்
பகைக்கும், பகை கோபத்துக்கும், கோபம் கொலைக்கும்
இடமுண்டாக்கிற்று. அப்படியே பாவமும். மனுஷன்
தனது பாவமில்லாத பரிசுத்த நிலைமையை இழந்தான்.
அவன் தேவ ஐக்கியத்தையும் அன்பையும் இழந்தான்.
மனப்பாக்கியத்தையும் சமாதானத்தையும் இழந்தான்.
தேவசாயலையும் இழந்தான்.

தேவ வாக்குச் சொல்லுகிறபடி மனுஷனுடைய நிலைப
ரம் இதுதான். இது உண்மையென்று எங்கள் மனம் ஒ
த்துக்கொள்ளக்கூடியதாயிருக்கின்றது. தேவ வாக்கா
னது முகங் காட்டுங் கண்ணாடி. அதிலே பார்க்கும்போ

முது அது நம்மை நாம் இருக்கிறபடி சரியாய்க் காட்டுகின்றது. அது பாவத்தை வேறொரு பெயரால் அழைக்கிறதுமில்லை. அது முகஸ்துதி பேசுகிறதுமில்லை. நாம் இருக்கிறபடி அது நம்மை நமக்குக் காட்டுகின்றது. இதிலும் அதிகமாக யேசுக்கிறிஸ்துவினாலாகும் இரட்சிப்பை நமக்குக் காட்டுகின்றது. இதை வாசிக்கிற சிநேகிதனே, இதை விசுவாசிக்கிறாயா? விசுவாசித்தால் யேசு இரட்சகர்மேல் நம்பிக்கைவைத்து கர்த்தரிடம் திரும்பி, அவர் உனக்கு வழிகாட்டவேண்டுமென்று பிரார்த்தனை செய். அப்போ தேவ கிருபையினாலே எங்கள் ஆதித் தாய்தகப்பன் ஏதேன் தோட்டத்திலே அனுபவித்த பரிசுத்த மனப்பாக்கியம் ஓர் அளவாக உனக்கும் அளிக்கப்படும். அதற்கும் மேலாகத் தேவஆவியானவர் உன்னிலே வாசம்பண்ணுவார், நீ அப்பா பிதாவே என்று சொல்லித் தேவ பிள்ளையாவாய். கடைசியில் நித்தியசீவன் பெறுவாய்.

பாவம் உலகத்தில் எப்படி வந்ததென்று அறிவது நல்லது. அது தேவ கட்டளையை மீறினதினாற்றான். அறியாமையினாலுமல்ல, கவனயீனத்தினாலுமல்ல. கட்டளை தெளிவாயும் துலாம்பரமாயுமிருந்தது. சோதனை மாமிச இச்சைக்கு ஏற்றதாயிருந்தது. தோட்டத்திலே விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசிக்கப்படாதென்பதே கட்டளை. இஸ்திரியானவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும் பார்வைக்கு இன்பமும் புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்கதும் என்று கண்டு, அதின் கனியைப் பறித்துப், புசித்து, தன் புருஷனுக்குங் கொடுத்தாள். இச் சோதனையானது கனியைப் புசிப்பதினால் மாமிச இச்சையைத் திருத்தியாக்குவதற்கு ஏதுவாயும், நன்மை தீமையை அறிவதினால் மன இச்சையைத் திருத்தியாக்குவதற்கு ஏதுவாயுமிருந்தது. ஆனாலும் அதின் பெறுபேறு என்னவென்று பார்ப்போமாக. அது தற்சினேகத்தை உண்டாக்கிற்று. அவள் தனித்துப் பாவஞ் செய்யப் பிரியப்படவில்லை. அதினால் வெட்கம் உண்டுபட்டது. அவர்கள் இருவரும் பயந்து தேவசந்நிதிக்கு விலகி ஒழித்துக்கொண்டார்கள்.

இப்படியே பாவமெல்லாம் கீழ்ப்படியாமையினாலுண்டாகின்றது. ஆராய்ந்து பார்த்தால் கீழ்ப்படியாமையே

பாவத்துக்கு வேர் என்று காண்போம். அப்படியே வேதமும் பொல்லாதவர்களைக் "கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்" என்று (எபே. 2: 2.) சொல்லுகின்றது. கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேற் தேவகோபாக்கினை வரும். (எபேசி. 5: 6.) கொலா. 3: 6.) பாவத்தினால் மனுஷ சுபாவத்துக்கு நேரிடும் கேடத்துக்குச் சாட்சியாக இந்து தேசத்தான் ஒருவன் ரோமர் நிருபத்தின் முதலாம் அதிகாரத்தில் ஒரு பங்கை வாசிக்கக் கேட்டபோது, அதை எழுதினவர் இந்துதேசத்துச் சனங்களைப் பற்றித்தான் எழுதியிருப்பாரென்று சொன்னான்.

மேலும் பாவம் உலகத்திற் பிரவேசித்தபோது உண்டான பெரிய மாறுதலை நினைத்திருப்பதும் நல்லது. அது மனுஷனைக் கெடுத்தது மாத்திரமல்ல, அவனிலே முன் ஒருக்காலுமில்லாத வோர் கெட்ட குணத்தை உண்டாக்கிற்று. இந்தக் குணம் நமக்குள்ளும் வந்திருக்கின்றது. இது எப்படி வந்ததென்பது தெளிவாய் விளங்காதிருந்தும், வந்திருப்பதும் மெய்.

பாவம் உலகத்துட் பிரவேசித்த வகையைக்கொண்டு, நாங்கள் மறுபடியும் தேவனோடு ஒப்புரவாகும்வகையை அறியலாம். கீழ்ப்படியாமையினாலே பாவம் வந்தது. நாம் தேவனுடைய இராச்சியத்துட் பிரவேசிப்பது கீழ்ப்படிவினாலேயே. இந்தப் பூரண கீழ்ப்படிதலை, பாவமுள்ள மனுஷன் நிறைவேற்றமாட்டான். ஆகையால் தேவனுடைய மட்டற்ற அன்பினால் அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துநாதர் பாவிகளுக்குப் பதிலாளாகவும் இரட்சகராகவும் ஏற்படுத்தப்பட்டார். இயேசு இவ்வுலகத்தில் வந்து நேரிட்ட சோதனைகள் எல்லாவற்றையும் வென்றார். அவர் எவ்விதத்திலும் பாவமற்ற பூரண கீழ்ப்படிதலுள்ளவராயிருந்தார். இந்தக் கீழ்ப்படிதலைக் கர்த்தர் எங்களுக்காக ஏற்றுக்கொள்ளச் சித்தமானார். நாங்கள் அவரில் விசுவாசிப்பதே எங்களிடம் கேட்கப்பட்ட காரியம். "விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்" என்ற இந்த விசுவாசத்தின் ஆவியைக் கர்த்தர் நம்முடைய இருதயங்களில் அருளுவாராக.

---

Strong and Asbury, Printers : Manippay--1891. Ed. 3000.